# முன்னுரிமை பயன்முறை: சவாரி கோரிக்கைகளுக்கான முன்னுரிமை அணுகலைப் பெறுங்கள்

ஆன்லைன் பயன்படுத்தும்போது அதிகம் சம்பாதிக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஆகஸ்டு 24 முதல், **முன்னுரிமை பயன்முறை**மற்ற ஓட்டுநர்களை விட அதிக சவாரி கோரிக்கைகளுக்கான அணுகலை உங்களுக்குக் கொடுக்கும், இது சவாரிகளுக்கு இடைப்பட்ட நேரத்தைக் குறைப்பதால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது நீங்கள் அதிகம் சம்பாதிக்க முடியும்.

**முன்னுரிமை பயன்முறை எப்படி வேலை செய்கிறது**

- **அதை எப்போது இயக்க வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**
  முன்னுரிமை பயன்முறையை இயங்கச் செய்யும் நேரத்தை நீங்கள் கட்டுப்படுத்த முடியும் — அதைப் பயன்படுத்துவது உங்கள் விருப்பம் சார்ந்தது மற்றும் அதைப் பயன்படுத்தாமலும் கூட எந்த நேரத்திலும் நீங்கள் ஆன்லைனை உபயோகிக்க முடியும். ஒவ்வொரு வாரமும் ஒரு சில முன்னுரிமை மணிகளுக்கான அணுகலை நீங்கள் பெறுவீர்கள்.
- **கிடைக்கும்போது அதைப் பயன்படுத்தவும்**
  ஒரு குறிப்பிட்ட நேரத்தில் முன்னுரிமை பயன்முறையைப் பயன்படுத்தக்கூடிய ஓட்டுநர்களின் எண்ணிக்கையை நாங்கள் கட்டுப்படுத்த முடியும் — அது கிடைக்கவில்லை என்றால் பின்னர் ஒரு நேரத்தில் பார்க்கவும்.
- **சவாரி கோரிக்கைகளுக்கான முன்னுரிமை அணுகல்**
  முன்னுரிமை பயன்முறை சவாரி கோரிக்கைகளுக்கு இடைப்பட்ட நேரத்தைக் குறைக்க உதவுகிறது. முன்னுரிமை இல்லாத பிற ஓட்டுநர்களுக்கு முன்னதாகவே சவாரி கோரிக்கைகளை நீங்கள் பெறுகிறீர்கள், எனவே உங்கள் சவாரிகளின் எண்ணிக்கைகளை நீங்கள் அதிகரித்துக்கொள்ள முடியும்.

**உங்கள் வருமானம் எப்படி வேலை செய்கிறது**

முன்னுரிமை பயன்முறையில் ஒவ்வொரு சவாரிக்கான உங்கள் கட்டணங்கள் குறைவாக இருக்கும் — **ஆனால் அதிக சவாரி உங்களுக்குக் கிடைப்பதால் மொத்தத்தில் பார்க்கும்போது நீங்கள் அதிகம் சம்பாதிக்க முடியும்.**உங்கள் முன்னுரிமைக் கட்டணங்களைப் பார்க்க ஆகஸ்டு 24-ஆம் தேதிக்குப் பிறகு உங்கள் ஓட்டுநர் செயலியைப் பார்க்கவும்.

**முன்னுரிமை பயன்முறையில் எப்படி சம்பாதிப்பது**

- **குறிப்பு #1:** உங்கள் வருமானத்தை அதிகரிக்க கிடைக்கும்போது இதை இயக்கவும். சவாரி கோரிக்கைகளுக்கு இடைப்பட்ட நேரத்தை இது குறைக்கும்.
- **குறிப்பு #2:** இதை நீண்ட காலத்திற்கு வைத்திருங்கள். புதிய சவாரி கோரிக்கைகள் வரும்போது முன்னுரிமை அணுகலை நீங்கள் தொடர்ந்து பெறுவீர்கள்.

**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்**

**முன்னுரிமை பயன்முறையை Lyft ஏன் அறிமுகப்படுத்துகிறது?**
ஓட்டுநர்கள் அதிக நேரம் சாலையில் செலவிட உதவுவதற்காக, நாங்கள் எப்போதுமே முன்னுரிமை பயன்முறை போன்ற புதிய அம்சங்களில் வேலை செய்துகொண்டிருக்கிறோம். கோவிட்-19 காரணமாக வருமானம் கணிசமான அளவு குறைவதை நாங்கள் பார்க்கும்போது, ஓட்டுநர்கள் முன்னுரிமை பயன்முறை இல்லாமல் சம்பாதிப்பதை விட இரண்டு மடங்கு சம்பாதிக்க உதவுவக்கூடிய ஒரு முன்னோடித் திட்டத்தை நாங்கள் அவசரமாக அறிமுகப்படுத்தினோம். முன்னோடித் திட்டத்தில் இருந்த ஓட்டுநர்களிடமிருந்து நேர்மறையான பின்னூட்டம் பெற்றதன் விளைவாக இந்த அம்சத்தின் ஒரு புதிய பதிப்பை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**முன்னுரிமை பயன்முறை எப்போது கிடைக்கிறது?**
நீங்கள் மொத்தத்தில் அதிகமாகச் சம்பாதிக்க முடியும்போது மட்டுமே முன்னுரிமை பயன்முறை கிடைக்கிறது. முன்னுரிமை ஓட்டுநர்களுக்கு எல்லா நேரங்களிலும் பயணிகள் கிடைப்பதையும், முன்னுரிமையற்ற ஓட்டுநர்களுடன் ஒப்பிடும்போது அவர்கள் அதிகம் சம்பாதிப்பதையும் உறுதிசெய்ய அணுகலை நாங்கள் கட்டுப்படுத்துகிறோம்.

**முன்னுரிமை பயன்முறை விருப்பம் சார்ந்ததா?**
ஆம், முன்னுரிமை பயன்முறையை இயக்க நீங்கள் விரும்பினால் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் — அதைப் பயன்படுத்துவது விருப்பம் சார்ந்தது மற்றும் அதைப் பயன்படுத்தாமலும் எந்த நேரத்திலும் நீங்கள் ஆன்லைனை உபயோகப்படுத்தலாம்.

**முன்னுரிமை பயன்முறையைப் பயன்படுத்துவதற்குரிய சிறந்த நேரம் எது?**
முன்னுரிமை பயன்முறை கிடைக்கும்போதும், குறைவான சவாரி கோரிக்கைகள் மட்டுமே இருக்கும்போதும் அதைப் பயன்படுத்துமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம். முன்னுரிமை பயன்முறையில், சவாரி கோரிக்கைகளுக்கு பிற ஓட்டுநர்களை விட உங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், இது சவாரிகளுக்கு இடையிலான காத்திருப்பு நேரத்தைக் குறைக்கிறது.

**முன்னுரிமை பயன்முறையை ஒரு வாரத்திற்கு எத்தனை மணிகளுக்கு நான் பயன்படுத்த முடியும்?**
சந்தை நிலைமைகளைப் பொறுத்து ஒவ்வொரு வாரமும் கிடைக்கக்கூடிய முன்னுரிமை மணிகளின் எண்ணிக்கையும் மாறுபடும்.

**முன்னுரிமை பயன்முறையை நான் எவ்வளவு நேரம் இயக்க முடியும் என்பதற்கான கட்டுப்பாடு ஏதாவது இருக்கிறதா?**
இல்லை, முன்னுரிமை பயன்முறையில் நீங்கள் சேர்ந்தவுடன், அந்தந்த வாரத்தில் இருக்கும் உங்கள் முன்னுரிமை பயன்முறை மணிகளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**முன்னுரிமைப் பயன்முறையை எந்த நேரத்திலும் நான் அணைத்துக் கொள்ளலாமா?**
ஆம், 'அணைக்கவும்' பொத்தானை தெரியும்படி செய்ய உங்கள் திரையில் அடிப்பகுதியில் உள்ள முன்னுரிமை பயன்முறை வரிசையைத் தட்ட வேண்டும். ஒரு சவாரியின் போது முன்னுரிமை

பயன்முறையை அணைப்பதற்கு “கடைசி சவாரி” அம்சத்தையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

**முன்னுரிமை பயன்முறை ஏன் கிடைப்பதில்லை?**

பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு காரணத்தினால் முன்னுரிமை பயன்முறை கிடைக்காமல் போகலாம்:

- அந்த வாரத்திற்கான உங்கள் முன்னுரிமை மணிநேரங்கள் அனைத்தையும் நீங்கள் பயன்படுத்திவிட்டீர்கள். உங்கள் உள்ளூர் நேரத்தில் ஒவ்வொரு திங்கள்கிழமையும் அதிகாலை 5 மணிக்கு மணிகள் மீட்டமைக்கப்படும்.
- முன்னுரிமை பயன்முறை இடங்கள் எதுவும் இல்லை. முன்னுரிமை வருமானத்தை அதிகரிக்க, ஏதாவதொரு நேரத்தில் அதைப் பயன்படுத்தக்கூடிய ஓட்டுநர்களின் எண்ணிக்கையை நாங்கள் கட்டுப்படுத்துகிறோம். ஒரு நேரத்தில் நாங்கள் அனுமதிக்கும் முன்னுரிமை ஓட்டுநர்களின் எண்ணிக்கை சந்தை நிலைமைகளைப் பொறுத்து மாறுபடும்.
- தங்கள் முன்னுரிமைகளில் உள்ள அனைத்து சவாரி வகைகளையும் ஏற்றுக்கொள்கின்ற ஓட்டுநர்களுக்கு மட்டுமே முன்னுரிமை பயன்முறை கிடைக்கிறது. முன்னுரிமை பயன்முறை கட்டணங்கள் தற்போது வழக்கமான சவாரிகளுக்கு மட்டுமே பொருந்தும், ஆனால் Lyft XL, Lux, Lux Black அல்லது Lux Black XL சவாரிகளுக்கான கோரிக்கைகளையும் நீங்கள் பெறலாம்.
- முன்னுரிமை பயன்முறை விமான நிலையங்களில் கிடைப்பதில்லை மற்றும் விமான நிலைய வரிசையை இது பாதிப்பதில்லை.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்தியங்களில் மட்டுமே முன்னுரிமைப் பயன்முறை இப்போது கிடைக்கிறது.

**நான் முன்னுரிமை பயன்முறையை அணைத்துவிட்டால் அல்லது அந்த வாரத்திற்கான எனது முன்னுரிமை மணிகள் தீர்ந்துவிட்டால் என்ன நிகழும்?**

முன்னுரிமை பயன்முறை இல்லாமலும் ஓட்டுநர்கள் ஆன்லைனை உபயோகிக்க முடியும், ஆனால் குறைவான சவாரி கோரிக்கைகளை மட்டுமே அவர்கள் காணக்கூடும். முன்னுரிமையற்ற ஓட்டுநர்களை விட முன்னுரிமை ஓட்டுநர்கள் சவாரி கோரிக்கைகளைப் பெற அதிக வாய்ப்புள்ளது.

**எனது முன்னுரிமை பயன்முறை மணிகளை நான் ஒரு வாரத்திற்கு பயன்படுத்தாவிட்டால், அதை அடுத்த வாரத்துடன் சேர்த்துக்கொள்ளலாமா?**

அவ்வாறு செய்ய முடியாது, உங்கள் முன்னுரிமை பயன்முறை மணிகள் பயன்படுத்தப்படாவிட்டால் அதை அடுத்த வாரத்துடன் சேர்க்கக் கூடாது.

**அனைத்து ஓட்டுநர்களும் முன்னுரிமை பயன்முறைக்கான அணுகலைக் கொண்டிருக்கிறார்களா?**

தற்போது, மியாமி, ஆஸ்டின் மற்றும் டொராண்டோ பகுதிகளைச் சேர்ந்த குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஓட்டுநர்கள் மட்டுமே முன்னுரிமை பயன்முறைக்கான அணுகலைக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் (மற்றும் பிற இடங்களில்) அதிக ஓட்டுநர்களுக்கு இந்த அனுபவம் கிடைக்கச் செய்ய நாங்கள் முயற்சித்து வருகிறோம்.

**முன்னுரிமை பயன்முறையைப் பயன்படுத்த நான் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாகனம் ஓட்ட வேண்டுமா?**

முன்னுரிமை பயன்முறையானது மியாமி, ஆஸ்டின் மற்றும் டொராண்டோ பகுதிகளில் மட்டுமே கிடைக்கிறது.

**முன்னுரிமை பயன்முறை ஏன் குறைவான கட்டண கார்டை கொண்டுள்ளது?**
முன்னுரிமை கட்டண கார்டு ஒவ்வொரு சவாரியின் செலவையும் குறைக்க நமக்கு உதவுகிறது. வேறுபாடு அதன் பிறகு சவாரி கோரிக்கைகளை அதிகரிக்க உதவுவதற்கு பயன்படுத்தப்படும். அதிகமான சவாரி கோரிக்கைகள் எழும்போது, சாலையில் உங்கள் வேலை மிகுதியாக இருக்கும். இது பயண கோரிக்கைகளுக்கு இடையிலான காத்திருப்பு நேரத்தைக் குறைக்க உதவுகிறது, அதாவது மொத்தத்தில் நீங்கள் அதிகம் சம்பாதிக்க முடியும்.

**முன்னுரிமை பயன்முறை இயக்கப்பட்டிருக்கும்போது என் ஊதியம் எப்படிக் கணக்கிடப்படுகிறது?**
முன்னுரிமை பயன்முறை கட்டண கார்டை பயன்படுத்தி உங்கள் ஊதியம் கணக்கிடப்படுகிறது. முன்னுரிமை பயன்முறையில், ஒரு சவாரிக்கான உங்கள் கட்டணங்கள் குறைவாக இருக்கும், ஆனால் நீங்கள் அதிக சவாரிகளைப் பெற முடியும். உங்கள் முன்னுரிமை பயன்முறை கட்டணங்களைப் பார்க்க உங்கள் ஓட்டுநர் செயலியைப் பார்க்கவும்.

**முன்னுரிமை பயன்முறையில் உண்மையிலேயே நான் அதிகம் சம்பாதித்திருக்கிறேனா என்பதை எப்படித் தெரிந்துகொள்வது?**
நீங்கள் முன்னுரிமை பயன்முறையில் சேர்ந்த முதல் சில மணிநேரங்களுக்கு, அதே நேரத்தில் உங்கள் சந்தையில் முன்னுரிமையற்ற ஓட்டுநர்களுடன் ஒப்பிடும்போது முன்னுரிமை பயன்முறையில் உங்கள் வருமானம் எப்படி இருந்தது என்பதன் சுருக்கத்தொகுப்பை நாங்கள் உங்களுக்கு மின்னஞ்சலில் அனுப்புவோம்.

**முன்னுரிமை பயன்முறை மற்ற போனஸ்களை பெறுவதற்கான எனது தகுதியைப் பாதிக்குமா?**
இல்லை, முன்னுரிமை பயன்முறையில் இருக்கும்போது மற்ற போனஸ்களையும் நீங்கள் பெற முடியும்.

**என்னிடம் முன்னுரிமை பயன்முறை மணிகள் மீதம் இல்லையென்றால் நான் ஆன்லைன் உபயோகிக்க முடியுமா?**
நீங்கள் எப்போது வேண்டுமானாலும் ஆன்லைனை உபயோகிக்க முடியும். உங்கள் Lyft Driver செயலியை மூலம் அதிகம் சம்பாதிக்கும் நேரங்கள் மற்றும் வாகனம் ஓட்டுவதற்கான இடங்கள் பற்றிய புதுப்பிக்கப்பட்ட செய்தியை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

**எனது முன்னுரிமை மணிகள் எப்போது மீட்டமைக்கப்படும்?**
உங்கள் உள்ளூர் நேரத்தில் ஒவ்வொரு திங்கள்கிழமையும் அதிகாலை 5 மணிக்கு உங்கள் முன்னுரிமை பயன்முறை மணிகள் மீட்டமைக்கப்படும்.

**முன்னுரிமை பயன்முறை விமான நிலையத்தில் செயல்படுகிறதா?**
இல்லை, தற்போது விமான நிலையங்களில் முன்னுரிமை பயன்முறை கிடைப்பதில்லை.

**முன்னுரிமை பயன்முறைக்கு எந்த சவாரி வகைகள் தகுதி பெற்றுள்ளன?**
முன்னுரிமை பயன்முறை தற்போது வழக்கமான சவாரி கோரிக்கைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றது. Lyft XL, Lux, Lux Black அல்லது Lux Black XL-க்கான சவாரி கோரிக்கைகளை நீங்கள் பெறலாம், ஆனால் அந்தக் கோரிக்கைகளுக்கான முன்னுரிமை அணுகலை நீங்கள் பெற மாட்டீர்கள்.

**முன்னுரிமை பயன்முறையுடன் 'சேருமிடம்' வடிகட்டியை நான் பயன்படுத்த முடியுமா?**
'சேருமிடம்' வடிகட்டியை நீங்கள் பயன்படுத்தாத போது முன்னுரிமை பயன்முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். முன்னுரிமை பயன்முறை இயக்கப்பட்டிருக்கும்போது 'சேருமிடம்' வடிகட்டியை நீங்கள் பயன்படுத்தலாம், ஆனால் இது நீங்கள் பெறும் சவாரி கோரிக்கைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும்.

**அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் திட்டத்தை முன்னுரிமை பயன்முறை எவ்வகையில் பாதிக்கிறது?**
நீங்கள் முன்னுரிமை பயன்முறையில் இருந்தாலும் கூட விநியோக சவாரிகளை முடிப்பதற்கான கோரிக்கைகளை நீங்கள் பெறக்கூடும். முன்னுரிமை பயன்முறை இயக்கப்பட்டிருக்கும்போது, ஏதேனும் விநியோக சவாரிகள் உட்பட அனைத்து சவாரிகளுக்கான உங்கள் கட்டணத்தைக் கணக்கிட முன்னுரிமை பயன்முறை கட்டண கார்டு பயன்படுத்தப்படும்.